*4*

# கிறிஸ்துவுடன் தொடர்பு

## (யோவான் 15:1-11)

*மறு உருவாக்கமான வாழ்வு என்பது கிறிஸ்துவுடன் ஒன்றிணைந்து வாழப்படும் வாழ்வாக உள்ளது ...*

“பிரெஞ்ச்சுத் தொடர்பு” பற்றி நீங்கள் கேள்விப்பட்டு இருக்கிறீர்கள். யோவான் 15:1-11, “கிறிஸ்துவுடன் தொடர்பு” பற்றியதாக உள்ளது. திராட்சச் செடி மற்றும் கிளைகள் ஆகியவற்றைப் பற்றி இயேசு பேசியபோது, நாம் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டுள்ளதாக அவர் வலியுறுத்தினார். அந்தச் செய்தி நமக்குத் தேவைப்படுகிறது.

சபையானது கிறிஸ்துவுடன் நமக்குள்ள தொடர்பு பற்றி வலியுறுத்தத் தவறக் கூடும், பல ஆண்டுகளுக்கு முன்பு ஜேம்ஸ் O. பெயர்டு என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> சபையானது கிறிஸ்துவின் நபர்த்துவத்திற்கு ஒரு மாபெரும் ஒப்புக்கொடுத்தலைப் பிடித்திருக்க வேண்டும் அல்லது உலகப்பிரகாரமான வளர்ச்சி மற்றும் ஆவிக்குரிய மாறுபாட்டின் தவிர்க்க இயலாத விளைவை அனுபவிக்க வேண்டும் என்று எனக்குப்படுகிறது. கிறிஸ்து மையத்தில் இருக்கும்போது மாத்திரமே, வேதாகமத்தில் இணைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ வாழ்வின் கொள்கைகளை நீண்டகாலம் நிலைநிறுத்தக் கூடிய இயங்கும் தன்மையுள்ள விரைவான சக்தி எதுவும் இருக்க முடியும். மீட்பருடன் தனிப்பட்ட வகையிலான உறவுமுறையின் நிபந்தனைகளில் கிறிஸ்தவ வாழ்வை வாழுதல் முதலில் விளக்கப்படும்போது மாத்திரமே, உண்மையிலேயே பாவத்தை வெறுக்கும் ஆவிக்குரிய கூருணர்வுத் திறன் இருக்கிறது மற்றும் கிறிஸ்தவ அர்ப்பணிப்பு மற்றும் தியாகம் ஆகியவற்றிற்கான திறனுடையவராக இருக்கவும் முடிகிறது.

1951ல் ரியூ போர்ட்டர் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> ... பிரசங்கியார்களாகிய நாம், சுவிசேஷத்தின் கிறிஸ்துவின் மீது செலுத்துவதைக் காட்டிலும் அதிகமான வலியுறுத்தத்தைக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மீது செலுத்துகிறோம் ... . தேவனுடைய சத்தியம் யாவும் கிறிஸ்துவுக்குள் மற்றும் கிறிஸ்துவின் மீது மையங்கொண்டுள்ளது. சத்தி யத்தின் கிரியை என்பது கிறிஸ்துவைப் பற்றிய அறிவிற்கு அத்தியாவசிய மானதாக உள்ளது என்பது நிச்சயம்; ஆனால் சுவிசேஷத்தின் மூலமாகக் கிறிஸ்துவின் வாழ்வும் பண்பும் பற்றி நாம் அறிய வருதல் என்பது நிச்சயமா கவே மிகப்பெரிய அவசியமாக உள்ளது.[1]

நமது மதம் என்பது உபதேசத்தின் விஷயமாக மாத்திரம் இருப்பதில்லை. அது நன்மை செய்தல் அல்லது பிறருக்கு உதவுதல் என்ற விஷயமாக மாத்திரமும் இருப்பதில்லை. அது ஒரு சபைக் கட்டிடத்தில் சடங்காச்சாரங்களைச் செய்தலின் விஷயமாகவும் இருப்பதில்லை. நமது மதமானது தேவனைப் பிரியப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்றால், அது நமது கர்த்தருடன் ஒரு நெருங்கிய உறவுமுறையை உள்ளடக்க வேண்டும்; கிறிஸ்துவே மைய மாகவும் வட்டச் சுற்று வளையமாகவும் இருக்கிறார், அவரே தொடக்கமும் முடிவுமாக இருக்கிறார், அவரே கிறிஸ்தவத்தின் மூலமாகவும் முடிப்பவராகவும் இருக்கிறார். நமது வாழ்வில் கிறிஸ்துவைப் பற்றிய விழிப்புணர்வுடன், நாம் அவருக்கு நெருக்கமாக வாழ*வில்லை* என்றால், நமது மதமானது இருக்க வேண்டியபிரகாரம் இருக்காது.

கிறிஸ்துவினிடம் நெருங்கிவரும்படி நம்மை அழைக்க, கிறிஸ்தவத் தொடர்பு பற்றி யோவான் 15:1-11 என்ன கூறுகிறது என்பதை நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக.

## ஒவ்வொரு கிறிஸ்தவர் மற்றும் கிறிஸ்து ஆகியோருக்கு இடையிலான நெருங்கிய தொடர்பு

கிறிஸ்து கிறிஸ்தவருக்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார்? உண்மை யான திராட்சச் செடிக்கு ஒரு கிளை எவ்வளவு நெருக்கமாக இருக்கிறதோ, அவ்வளவு நெருக்கமாக இருக்கிறார்! இயேசு, "நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர்" என்று கூறுவதன் மூலம் தொடங்குகிறார் (யோவான் 15:1). பிற்பாடு அவர், "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்" என்று கூறுகிறார் (யோவான் 15:5). திராட்சச் செடி ஒன்றைப் பற்றி நினைத்துப் பாருங்கள்; அந்தச் செடிக்குக் கிளைகள் எவ்வளவு நெருக்கமாக உள்ளன? அவற்றிற்கு இடையில் வித்தியாசப்படுத்துதல் கடினமாயிருக்கும் அளவுக்கு அவைகள் நெருக்கமாக உள்ளன.அவ்வளவு நெருக்கமாகத்தான் கிறிஸ்துவும் கிறிஸ்தவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்!

புதிய ஏற்பாடு பல இடங்களில், அந்த நெருக்கத்தைப் பற்றி வலியுறுத்துகிறது. நாம் கிறிஸ்தவர்கள் ஆகிறபோது, நாம் "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம்" பெறுகிறோம்; மற்றும் ஞானஸ்நானத்தில் நாம் "கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்" மற்றும் "கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ள வர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு" எழுப்பப்படுகிறோம் (ரோமர் 6:3-5). மேலும் பவுல், "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்றும் கூறுகிறார் (கலாத்தியர் 3:27). கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நாம் பின்வருமாறு கூறமுடியும்:

> இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலாத்தியர் 2:20).
>
> கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் (பிலிப்பியர் (1:21).
>
> நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும்

*கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம் (ரோமர் 14:8).*

*... [நமது] ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது (கொலோசெயர் 3:3).*

*கிறிஸ்துவானர் மகிமையின் நம்பிக்கையாக [நமக்குள்] இருப்பதே அந்த இரகசியம் (கொலோசெயர் 1:27).*

இந்த நெருக்கமானது ஒரு தனிநபருக்குரிய விஷயம் என்ற உண்மையை நாம் மதிப்பதும் அவசியமாக உள்ளது. *ஒவ்வொரு கிறிஸ்தவரும்* ஒரு கொடியாக இருக்கிறார்! யோவான் 15:6ல் இயேசு என்ன கூறுகிறார் என்பதைக் கண்ணோக்குங்கள்: "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல் அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்." "எவரொருவரும்" "கொடியைப் போல" எறிந்து விடப்படுகின்றனர் ... ஒவ்வொருவரும் ஒரு கொடியாக உள்ளனர். எனவே கொடிகள் என்பவை தனிநபர்களே தவிர சபைகள் அல்ல. ஒரு கிறிஸ்தவரிடத்தில், அவர் எந்த சபையில் உறுப்பினராக இருக்கிறார் என்று கேட்கப்பட்டது. அவர், "சபை" என்று பதில் அளித்தார். அவரைக் கேள்வி கேட்டவர் திகைத்துப்போய் பின்வருமாறு கேட்டார்: "ஆனால் எந்த சபை?" அதற்கு அவர், "சபைதான்" என்று பதில் அளித்தார். "இல்லை, இல்லை, நீங்கள் உலகளாவிய சபையில் ஒரு உறுப்பினராக இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் சபையின் எந்தப் பிரிவில் [கொடியில்] நீங்கள் உறுப்பினராக இருக்கிறீர்கள்?" என்று அவரிடத்தில் திரும்பும் கேட்கப்பட்டது. அதற்கு அந்தக் கிறிஸ்தவர், "நான் எந்தப் பிரிவிலும் [கொடியிலும்] உறுப்பினராக இருப்பதில்லை, ஆனால் நானே ஒரு கொடி என்பதை அறிந்திருக்கிறேன்; நான் என்னிலேயே ஒரு கொடியாக இருக்கிறேன்!" என்று பதிலுரைத்தார். அது மிகவும் சரியானதாகவே உள்ளது! ஒவ்வொரு கிறிஸ்தவரும் தம்மில்தாமே ஒரு கொடியாக இருக்கிறார்!

அந்தக் கருத்தானது, மறைமுகமான அர்த்தங்களைக் கொண்டுள்ளது. அது, கிறிஸ்துவுடனான உங்கள் தொடர்பு வேறு எவரையும் சார்ந்திருப்பதில்லை என்று அர்த்தப்படுகிறது; நாம் சபை என்ற வகையில் அல்ல, ஆனால் தனிநபர்கள் என்ற வகையிலேயே கிறிஸ்துவுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறோம். ஒரு அபிஷேகம் பெற்ற பாதிரியார் மூலமாகவோ அல்லது பரிசுத்தமான ஒரு மத்தியஸ்தர் மூலமாகவோ கிறிஸ்துவினிடத்தில் செல்ல வேண்டியதில்லை. அல்லது கிறிஸ்துவை அணுகுவதற்கு உங்கள் பிரசங்கியாருடன் நீங்கள் நட்புறவுடன் இருக்க வேண்டியதில்லை. கிறிஸ்துவுடனான உங்கள் உறவானது, என்னையோ, மூப்பர்களையோ அல்லது வேறு எவரையுமோ சார்ந்திருப்பதில்லை. அது உங்களைச் சார்ந்ததாகவே உள்ளது.

## கிறிஸ்துவுடன் அந்த நெருக்கமான தொடர்பைப் பராமரிக்க வேண்டியது அவசியம்

இவ்வசனப்பகுதியானது, கிறிஸ்துவுடனான நமது நெருங்கிய தொடர்பு

துண்டிக்கப்படக்கூடும் என்று தெளிவாகக் கூறுகிறது. “ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல் அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்” (யோவான் 15:6). ஆகவே, அந்தத் தொடர்பைப் பராமரித்தலும் நம்மைச் சார்ந்ததாகவே உள்ளது. நாம் இயேசுவுக்குள் நிலைத்திருக்கும்படி கேட்டுக் கொள்வதன்மூலம், இயேசு இதைப்பற்றித் திரும்பத் திரும்பக் கூறுகிறார்:

> *என்னில் நிலைத்திருங்கள், ... (யோவான் 15:4).*
>
> *நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் (யோவான்15:5).*
>
> *ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், ... அவன் எறியுண்டு உலர்ந்து போவான் (யோவான் 15:6).*
>
> *நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (யோவான் 15:7).*
>
> *நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள் (யோவான் 15:10).*

கிறிஸ்துவில் நிலைத்திருங்கள்! அதுவே கட்டளையாக உள்ளது! அது நமக்கு, கிறிஸ்துவை நாம் நெருங்கியிருக்கிறோமா அல்லது இல்லையா என்பது நம்மை சார்ந்திருக்கிறது, கிறிஸ்துவை அல்ல என்று கூறுகிறது! நாம் மிகவும் ஆவிக்குரியவர்களாக உணராவிட்டால், நாம் கிறிஸ்துவைவிட்டுத் தொலைவில் இருக்கிறோம் என்று உணர்ந்தால், நாம் அவ்வாறு இருக்க வேண்டும் என்று கிறிஸ்து விரும்புவதால் அப்படி இருக்கிறோம் என்றல்ல என நாம் உறுதியாகக் கூறமுடியும்! மாறாக நாம் அவரில் நிலைத்திருக்கத் தவறியதாலேயே அவ்வாறு ஏற்படுகிறது.

ஆனால், உங்கள் கர்த்தருடன் நீங்கள் ஒரு நெருங்கிய தொடர்பைப் பராமரித்தல் எவ்வாறு? பல வழிகள் ஆலோசனையாகக் கூறப்பட முடியும்:

*கிறிஸ்துவைப் பற்றி வாசித்து* நீங்கள் வாசிப்பதன்மீது தியானம் செய்யுங்கள். சுவிசேஷங்களை முறையாக வாசியுங்கள், அப்போது நீங்கள் கிறிஸ்துவை அதிகம் அதிகமாக அன்புகூரக் கற்றுக் கொள்வீர்கள்.

சபையின் ஆராதனை ஊழியங்களிலும் உங்கள் சொந்தத் தியானங்களிலும் *கிறிஸ்துவைத் துதியுங்கள்*. துதி என்பது வழிபாட்டின் வெளியரங்கமான வெளிப்பாடாக உள்ளது, நாம் யாரை வழிபடுகிறோமோ அவரைப்போல் அதிகம் அதிகமாக மாறுகிறோம்.

*கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் கற்று அறியக்கூடிய ஆராதனைக் கூட்டங்களில் கலந்து கொள்ளுங்கள்*. ஞாயிறு வேதாகம வகுப்புகள், ஞாயிற்றுக்கிழமை காலை

ஆராதனைக் கூட்டங்கள், ஞாயிற்றுக்கிழமை மாலை மற்றும் புதன்கிழமை மாலை ஆராதனைக் கூட்டங்கள். கிறிஸ்துவினிடத்தில் நெருக்கமாக, நெருக்க மாக வரவிரும்பி, ஆனால் அதே வேளையில் கிறிஸ்து பிரசங்கிக்கப்படுகிற மற்றும் அவரது வசனம் போதிக்கப்படுகிற கூட்டங்களுக்கு வேண்டுமென்றே வராதிருக்கும் யாரேனும் ஒருவரைப்பற்றி என்னால் கற்பனை செய்து பார்க்க இயலவில்லை.

*கிறிஸ்துவைப் போலிருக்க முயற்சி செய்துகொண்டிருப்பவர்களுடன் இருங்கள்.* அவர்களின் உதாரணம் உங்கள்மேல் ஒட்டிக்கொள்ளும். கிறிஸ்துவின் வழிக்கு நேரெதிர் வழியில் வாழ்பவர்களுடன் நீங்கள் உங்கள் நேரத்தின் பெரும்பான்மையான பகுதியைச் செலவிட்டால், அவர்களின் உதாரணத்தைப் பின்பற்ற நீங்கள் சாய்ந்துபோவீர்கள் என்பதும் உண்மையாகவே உள்ளது. “ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்” என்பது இன்னமும் உண்மையாகவே உள்ளது (1 கொரிந்தியர் 15:33).

உங்கள் வாழ்வைக் *கிறிஸ்துவின் வாழ்வினுடைய மாதிரியாக்க,* அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்ற, *உணர்வுப்பூர்வமாக முயற்சியை மேற் கொள்ளுங்கள்* (1 பேதுரு 2:21). சார்லஸ் ஷெல்டன் என்பவரின், *“In His Steps”* என்ற புத்தகத்தில் உள்ள மக்களைப் போன்று, “இயேசு என்ன செய்வார்?” என்று முதலில் கேட்காது, நீங்கள் ஒரு விஷயத்தையும் செய்வதில்லை என்று தீர்மானம் செய்யுங்கள்.

*கிறிஸ்துவைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.* வெற்றிகரமாக இருப்பது எப்படி என்று பிறருக்குப் போதிக்கும் மக்கள், பின்வரும் கருத்தை ஏற்படுத்துகின்றனர்: “நாள் முழுவதிலும் நீங்கள் எதைப்பற்றிச் சிந்திக்கிறீர்களோ, அதுவாகவே ஆகிறீர்கள்.” நாம் இன்னும் அதிகமாய்க் கிறிஸ்துவைப் போலாக வேண்டு மென்றால், அவருடன் நெருக்கமாக வாழவேண்டும் என்றால், நாள் முழுவதி லும் நாம் அவரைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்!

இத்துடன் கூடுதலாக, இந்த வசனப் பகுதியானது குறிப்பாக இரு கேட்புகளை ஏற்படுத்துகிறது:

முதலாவது இது, கிறிஸ்துவின் வசனங்களில் நாம் நிலைத்திருத்தலைக் கேட்கிறது. நாம் கிறிஸ்துவின் வசனங்களினால் தொடக்கத்தில் சுத்தமாக் கப்படுகிறோம்: ‘‘நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்’’ (யோவான் 15:3). நாம் கிறிஸ்துவுடன் நெருங்கி நிலைத்திருத்தல் பற்றிக் கவலைப்படக் கூடுவதற்கு முன்னர், நாம் அவருடன் தொடர்புபடுத்தப் பட்டிருக்க வேண்டியுள்ளது. நாம் கனிகொடுப்பதற்கு முன்னர், நாம் வாழ்வை அனுபவிக்க வேண்டியுள்ளது. நாம், விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் கிறிஸ்துவினிடத்தில் திரும்புவதினால், ‘‘அவரை விசுவாசித்து, நமது பாவங்களில் இருந்து மனந்திரும்பி, அவரது நாமத்தை அறிக்கையிட்டு மற்றும் அவருக்குள் ஞானஸ்நானம் பெறுவதினால்’’ அந்தத் தொடர்பை ஏற்படுத்துகிறோம்.ஆனால் நாம், வசனத்தினால் மாத்திரமல்ல, அவரது வசனத்தில் நிலைத்திருப்பதாலும் அல்லது கிறிஸ்துவின் வசனத்தை நமக்குள் நிலைத்திருக்க அனுமதிப்பதாலும், அவருடன் ஒன்றிக்கிறோம். இயேசு, “நீங்கள் என்னிலும், *என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்,* நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும்” என்று கூறுகிறார்

(யோவான் 15:7; என்னால் வலியுறுத்தப்படுகிறது). *தேவனுடைய வசனத்தைப் புரிந்துகொள்ளுதல் மற்றும் அவற்றிற்குக் கீழ்ப்படிதல் ஆகியவை இன்றி, கிறிஸ்துவுடன் உண்மையான ஒன்றிப்பு, உண்மையான ஆவிக்குரிய தன்மை ஆகியவை இருப்பதில்லை.*

இரண்டாவது, மற்றும் இவ்வசனப்பகுதியுடன் நெருங்கிய தொடர்புடைய வகையில், இவ்வசனப் பகுதியானது கிறிஸ்துவின் கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது: "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத் திருப்பீர்கள்" (யோவான் 15:10). நீங்கள் கிறிஸ்துவுடன் நெருங்கி நிலைத்திருக்க விரும்பினால், இயேசு கூறுவதைச் செய்ய வேண்டியது முற்றிலும் இன்றியமை யாததாக உள்ளது.

தங்கள் மார்க்கத்தில் வைராக்கியமாக உள்ள - கிறிஸ்துவுக்கு மிகவும் நெருக்கமாக இருப்பதாக உணருகிற, தங்கள் இரட்சிப்பை முறையாகச் "சாட்சிகொடுக்கிற" சிலரை நாம் யாவரும் அறிகிறோம். அவர்களின் வைராக்கியத்தையும் உற்சாகத்தையும் நாம் பாராட்டுகையில், பின்வரு மாறு ஆச்சரியப்படவும் செய்கிறோம்: கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலின் மூலம் அவர்கள் உண்மையிலேயே கர்த்தருக்குக் கீழ்ப்படிந் திருக்கின்றார்களா? அவர்கள் மத்தேயு 7:21-23ல் இயேசு யாரைப் பற்றிப் பேசினாரோ, அவ்வகையான மக்களைப் போலிருக்கலாம்:

> *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை … அந்நாளில் அநேகர் என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.*

கிறிஸ்துவுடன் நிலைத்திருக்கும்படி நம்மை ஊக்குவிப்பது எது? கிறிஸ்துவுடன் தொடர்புபடுத்தப் பட்டிருக்கும் நிலையிலிருந்து தவறுவதினால் ஏற்படும் விளைவுகளின் காரணமாக, நாம் அவருடன் நெருங்கி நிலைத்திருக்க வேண்டும் என்பது அவசியமாக உள்ளது என்பது தெளிவு.நாம் அவருடன் நிலைத்திராதபோது (1) நாம் கனிகொடுக்க இயலாது: "கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால், அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள்" (யோவான் 15:4). (2) நாம் எதையும் நிறைவேற்ற இயலாது: "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவான் 15:5). (3) நாம் வெட்டி எறியப்பட்டு விடுவோம்: "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், … கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான் …" (யோவான் 15:6).

# கிறிஸ்துவுடன் நமது நெருங்கிய தொடர்பின் நோக்கம்

*நாம் ஏன் கிறிஸ்துவுடன் நெருங்கி இருக்கிறோம்? நெருங்கி இருத்தல், நமது ஆவிக்குரிய தன்மை ஆகியவற்றைக் குறித்துப் பெருமைபாராட்டக் கூடுவதற்கா? அந்த உறவைப் பகிர்ந்துகொள்ளும் விருப்பம் இல்லை என்பதை வெளிப்படுத்துவதற்கா? இல்லை. இவ்வசனப் பகுதியானது கனிகொடுத்தல் என்பதே நமது தொடர்பின் நோக்கம் என்பதை தெளிவாகப் போதிக்கிறது! ஒரு திராட்சச் செடியின் கொடியாக இருத்தலின் நோக்கம் என்னவாக உள்ளது? திராட்சக் கனிகளைக் கொடுத்தல் என்பதே! பருத்தியை உற்பத்தி செய்தல் என்பதே பருத்திச் செடியுடன் இணைந்திருத்தல் என்பதின் நோக்கமாக இருப்பதைப் போன்று, மற்றும் பீச் பழங்களை உற்பத்தி செய்தல் என்பதே பீச் மரத்தில் ஒரு கிளையாக இருத்தலின் நோக்கமாக இருப்பதைப் போன்று, என்ற கருத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாம் கனிகொடுக்கவில்லை என்றால் நமது நோக்கத்தை நாம் நிறைவேற்றவில்லை என்று அர்த்தமாகிறது.*

*இது, இவ்வசனம் நோக்கங்கொண்டுள்ளதைக் காட்டிலும் அதிகமாகக் கூறுவதாக இதை ஏற்படுத்தலாம், ஆனால் இயல்பான உலகில் திராட்சச்செடி மற்றும் கிளைகள் ஆகியவற்றிற்கு இடையிலான பரஸ்பர உறவு உள்ளது என்பதைக் கவனித்தல் குறைந்தபட்சம் ஆர்வமுடையதாக உள்ளது. திராட்சச்செடியானது பேணிவளர்த்தலையும் கிளைகளுக்கு - தண்ணீர் மற்றும் சத்துக்கள் என்ற - போஷாக்கை அளித்தலையும் செய்கிறது. ஆனால் திராட்சச்செடியானது தன்னில்தானே கனிகொடுக்க இயலாது. செடியின் நோக்கத்தை நாம் ஆழ்ந்து சிந்தித்தால், கிளைகளின் உதவியின்றி அது தனது நோக்கத்தை நிறைவேற்ற இயலாது என்பதைக் கவனிக்கலாம். ஆவிக்குரிய வகையிலும் செடி மற்றும் கிளைகளின் விஷயம் இதைப்போன்றே உள்ளது: (1) செடியில், பேணிவளர்த்தல் என்பது உள்ளது. (2) ஆனால் இயேசு இந்த உலகத்தில் செய்ய விரும்புகிற யாவற்றையும் நாமின்றி அவரால் நிறைவேற்ற இயலாது. எடுத்துக்காட்டாக, அவர் இழந்துபோனதை தேடவும் இரட்சிக்கவும் வந்தார், ஆனால் நமது ஒத்துழைப்பு இன்றி, நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் இன்றி, இழந்துபோனவர்களை அவரால் இரட்சிக்க இயலாது.*

*கனிகொடுத்தல் என்பது நமது பொறுப்பாக இருப்பதால், நாம் பின்வரும் கேள்வியைக் கேட்க வேண்டியுள்ளது: நாம் கொடுக்க வேண்டிய கனி என்னவாக உள்ளது? சாத்தியமான பல பதில்கள் உள்ளன."ஆவியின் கனிகளை" கொடுத்தல் (கலாத்தியர் 5:22, 23), "வெளிச்சத்தின் கனி" (எபேசியர் 5:9) மற்றும் "நீதியின் கனி" (பிலிப்பியர் 1:10; யாக்கோபு 3:18) ஆகியவற்றைப்பற்றிப் புதிய ஏற்பாடு பேசுகிறது.*

*யோவான் 15க்கான இன்னொரு விளக்கம் பின்வருமாறு: நாம், மற்றவர்களையும் நம்மைப் போலாக்க வேண்டும். இது கிறிஸ்துவுக்கென்று கனிகொடுக்க மற்றவர்களை மனமாற்றவேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கும் மற்ற வசனப்பகுதிகளுடன் ஒத்திருப்பதாகும். (ரோமர் 1:13; பிலிப்பியர் 1:22; 4:17 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும்.) இவ்வசனப் பகுதியை நாம், கிறிஸ்துவுக்கென்று யாரையேனும் மனமாற்றுவதன் மூலமாக நாம் கனிதராவிட்டால், நாம், "வெளியே எறியுண்ட கொடியைப்போல*

... எறியுண்டு உலர்ந்து ... எரிந்து போவோம்" (யோவான் 15:6) என்று கூறுவதற்குச் சட்டப்பூர்வமான வகையில் பயன்படுத்த விரும்பமாட்டோம் என்பது நிச்சயம். இருப்பினும் நாம், நமது திறமையைக் கொண்டு, நமக்குள்ள வாய்ப்புகளைக் கொண்டு, நம்மால் இயன்ற வகையில் மிகச் சிறப்பான முறையில், கிறிஸ்துவினிடத்திற்கு மற்றவர்களைக் கொண்டுவர மிகச்சிறப்பான வகையில் செயல்பட வேண்டும். நாம் "நல்லவர்களாக" இருந்தால் மாத்திரம் போதாது என்று கர்த்தர் விரும்புகிறார் என்பதே இங்கு கருத்தாக உள்ளது. நாம் "நல்லவர்களாக" ஆனால் "எதற்கும் உதவாத நல்லவர்களாக" இருந்து விடலாம். கிறிஸ்துவுக்குள் நாம் நிலைத்திருத்தலின் விளைவுகள் நமக்கும் மற்றவர்களுக்கும் கவனிக்கப்படத் தக்கதாக இருக்க வேண்டும்.

ஆனால், இயேசு நம்மைக் கொஞ்சம் கனிகொடுப்பவராக மாத்திரம் இருக்கும்படி விரும்புவது இல்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டும்! இவ்வசனப் பகுதியில் கனிகொடுத்தலின் நான்கு அளவுகள் உள்ளதைக் கவனியுங்கள்: (1) *கனியற்ற* தன்மை: "என்னில் கனிகொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார், ..." (வசனம் 2). (2) *கனி*: "... அது கனிகொடுக்கிற கொடி எதுவோ ... அதைச் சுத்தம்பண்ணுகிறார்" (வசனம் 2). (3) *அதிககனிகள்*: "... அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, ..." (வசனம் 2). (4) *மிகுந்த கனிகள்*: "ஒருவன் என்னிலும், நான் அவனிலும், நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்" (வசனம் 5); "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (வசனம் 8). இந்த அளவையில் நீங்கள் எவ்விடத்தில் இருக்கிறீர்கள்? "நான்காவது" அளவை அடைய நம்மால் இயன்ற அளவு மிகச்சிறப்பாகச் செயல்படும் வரையில் கர்த்தர் முழுமையாக நிறைவடைவது இல்லை.

கர்த்தர் நம்மை எவ்வாறு "மிகுந்த கனிகளைக்" கொடுக்கக் கூடியவர்கள் ஆக்குகிறார்? யோவான் 15:2 பின்வருமாறு கூறுகிறது: "... கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்." அவர் அதைச் சுத்தம்பண்ணுகிறார்! அது வேதனை நிறைந்ததாக இருக்கக் கூடும்! உங்களுக்கு நடைபெறும் சில விஷயங்கள், நீங்கள் அதிக கனி கொடுப்பதற்காக உங்களைச் "சுத்தம் பண்ணும்" தேவனுடைய வழியாக இருக்கக் கூடும். இழப்புக்கள், சுகவீனங்கள், ஏமாற்றங்கள் - என்பவை, நீங்கள் அதிக கனிகொடுப்பவர்களாக இருப்பதற்குத் தேவன் உங்களுக்கு உதவுகிற வழியாக இருக்கலாம்.

## கிறிஸ்துவுடன் நமது நெருங்கிய தொடர்பின் விளைவு

நாம் "கிறிஸ்துவில் நிலைத்திருந்தால்," அதன் விளைவு என்னவாக இருக்கும்? (1) நாம் அதிக கனிகளைக் கொடுப்போம் என்று இயேசு கூறுகிறார் (யோவான் 15:5). (2) நாம் எவற்றைக் கேட்கிறோமோ, அவற்றைப் பெற்றுக்கொண்டிருப்போம்; "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும்" (யோவான் 15:7).(3) தேவன் மகிமைப்படுத்தப்படுவார்: "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (யோவான் 15:8). (4) நாம் கிறிஸ்துவின் அன்பில் நிலைத்

திருப்போம் (யோவான் 15:10). கிறிஸ்து எல்லாரையும் அன்புகூருகிறார், ஆனால் கிறிஸ்துவின் கட்டளைகளைக் கைக்கொண்டு அவருடன் நிலையாக நெருக்கமாயிருப்பவர்கள் அவரது அன்பில் இருந்து பயன்பெறுகின்றனர். (5) நமது சந்தோஷம் நிறைவாயிருக்கும். இயேசு, "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" என்று கூறி இவ்வசனப் பகுதியை முடிக்கிறார் (யோவான் 15:11). நாம் சந்தோஷமாயிருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். நாம் எவ்வாறு அப்படியிருக்க முடியும்? கிறிஸ்துவுடனான நமது தொடர்பைப் பராமரிப்பதாலேயே! நாம் கிறிஸ்துவுடன் நெருக்கமாக நிலைத்திருந்தால், நாம் கனிகொடுக்கிறவர்களாக இருப்போம், நாம் கேட்டுக்கொண்டவை யாவற்றையும் பெற்றிருப்போம், நாம் தேவனை மகிமைப்படுத்துவோம், நாம் கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருப்போம் மற்றும் நாம் சந்தோஷம் நிறைந்தவர்களாக இருப்போம்! கிறிஸ்துவுடனான நமது நெருங்கிய தொடர்பைப் பராமரிக்க நாம் தவறியதால் நாம் ஆவிக்குரியவற்றில் ஊக்கம் குன்றியிருக்கலாம்.

## முடிவுரை

கிறிஸ்துவுடன் நெருங்கி நிலைத்திருத்தல் என்பது வாழ்வா அல்லது மரணமா என்ற விஷயமாக உள்ளது. இருதயம் இல்லாமல் ஒரு மனிதர் வாழமுடியுமா? இயந்திரம் இல்லாமல் ஒரு வாகனம் ஓட முடியுமா? ஒரு கிளையானது பேணிவளர்த்தலை அளிக்கும் செடியுடன் இணைக்கப்பட்டிராமல் உயிர் வாழ முடியுமா? அதுபோலவே கிறிஸ்துவுடன் தொடர்புபடுத்தப்படாமல், எந்த ஒரு கிறிஸ்தவரும் உயிர்பிழைத்திருக்க இயலாது. அவரே நமது பலத்தின் ஆதாரமூலமாக இருக்கிறார், நம்மைப் பெலப்படுத்துகிறவராக இருக்கிறார், நமது ஆவிக்குரிய இருப்பிற்கு அத்தியாவசியமான ஒரு கூறாக இருக்கிறார், நமது வாழ்வின் நன்மைக்குத் தோற்றுவாயாக இருக்கிறார், நமது இருதயமாக இருக்கிறார். கிறிஸ்துவுடன் நெருங்கி நிலைத்திருங்கள்! தொடர்பற்றுப் போய்விடாதீர்கள்!

பத்து மற்றும் ஆறு வயதான இரு சகோதரர்களைக் கற்பனை செய்துகொள்ளுங்கள், அவர்கள் ஒரு சிறு ஏரியில் ஒரு படகில் இருந்தவாறே மீன்பிடித்துக் கொண்டிருக்கின்றனர். ஆறுவயதான பையன் ஒரு மீனைப் பிடித்துவிடுகிறார், அவன் தனது மன எழுச்சியில் எழுந்து நிற்கிறான், மற்றும் படகு கவிழ்கிறது. அவனால் அரிதாகவே நீந்த முடிகிறது, ஆனால் குப்புறக் கவிழ்ந்த படகின் அருகில் செல்லச் சமாளித்து அதைப் பற்றிக்கொள்கிறான். பத்து வயதான பையனும்கூட அந்தப் படகைப் பற்றி இருக்கிறான். இப்போது அவர்கள் என்ன செய்கிறார்கள்? உதவி எதுவும் பார்வையில் தெரியவில்லை. பெரிய பையன் நன்கு நீந்துபனாக இருக்கிறான், கரையானது நூறடி தூரத்தில்தான் உள்ளது, ஆனால் அவன் தன் தம்பியைக் கரைக்கு இழுத்துச் செல்லும் அளவு பலம் கொண்டிருக்கவில்லை. கடைசியாக அவன், கரைக்கு நீந்திச் சென்று உதவியைப் பெற முடிவுசெய்கிறான். அவன் அதையே செய்கிறான். அவன் கரைக்குச் சென்று எழும்பி நிற்கையில், தனது சின்னத் தம்பியைத் திரும்பிப் பார்க்கிறான், அவன் மிகவும் ஆபத்தான நிலையில் படகைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கிறதைக் காண்கிறான். இவன் உரக்கக் கூவுகிறான்:

*"பிடித்துக்கொள்! தளர்வாய் விட்டுவிடாதே!" பின்பு அவன் யாரையேனும் கண்டுபிடிக்கத் தன்னால் இயன்ற அளவுக்கு விரைவாக ஓடுகிறான். பத்து நிமிடங்களுக்குப் பின்பு, தனது தம்பியைப் பாதுகாப்பாகக் கொண்டுவரக்கூடிய பல மனிதர்களுடன் அவன் திரும்பி வருகிறான். ஆனால் அங்கு அந்தப் பையன் இருக்கும் அடையாளம் எதுவும் காணப்படவில்லை. அவன் களைப்படைந்தவனாக, பிரிந்துபோனவனாக, இழந்துபோகப்பட்டவனாக, அந்த ஏரியின் இருளான தண்ணீருக்குள் மூழ்கிப்போனான்.*

*அவனைப் பொறுத்த மட்டில், படகைவிட்டுப் பிரிந்துபோகுதல் என்பது அழிந்து போவதாக இருந்தது. கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில், கிறிஸ்துவை விட்டுப் பிரிந்திருத்தல் என்பது பேரழிவாக உள்ளது.*

*நீங்கள் கிறிஸ்துவுக்குள் இல்லையென்றால், இன்றே அவருடனான நெருங்கிய ஐக்கியத்தை நீங்கள் அனுபவிக்கத் தொடங்க முடியும்; நீங்கள் ஒரு கொடியானது தனது செடியுடன் கொண்டுள்ளது போன்று நெருக்கத்தைக் கிறிஸ்துவுடன் கொண்டிருக்க முடியும்!*

---

குறிப்பு

[1]Rue Porter, *Christian Worker*, 10 January 1951.